உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-ருஉ.] துன்முகி-ஸூ—வைகாசி-மீ [பகுதி எ.
Vol. 52. May–June—1956. No. 7.

உள்ளுறை

இலக்கியச் சூழ்நிலையில் மக்கள் தேவை: 193
மெ. சுந்தரம்

ஒரு சிறு குறிப்பு "தீர்ந்ததன் தீர்பு": 202
பண்டித. வித. நாராயணசாமியார்

பொய்யடிமை இல்லாத புலவரும் சேக்கிழார் பெருமானார் கருத்தும்: 208
வித்துவான், பாலூர் கண்ணப்ப முதலியார்

சிலப்பதிகாரம்—திருமணமும் இல்வாழ்க்கையும்: 213
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

பல்யானைச் செல்கெழு குட்டுவன்: 220
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

வருடம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1956.

"செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
   தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனர், மதுரை

3. டாக்டர். மா, இராசமாணிக்கனர் M. A. M. O. L. L. T Ph. D.
   தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
   தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
   வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
   செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
   அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
   தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௨.] துன்முகி-ஸூ—வைகாசி-மீ [பகுதி-௭.

Vol. 52. May–June—1956. No. 7.

* இலக்கியச்சூழ்நிலை-மக்கள் தேவை

திரு. மெ. சுந்தரம் அவர்கள், பி. ஓ. எல். (ஆனர்சு)

மக்களின்தேவையை மன்றத்திற்கு எடுத்துக்காட்டுவனவே இலக்கியங்களாகும். ஒரு இலக்கியம் சமுதாயத்தில் போற்றப்படவேண்டுமானால் அது அக்காலமக்களின் வாழ்வையும் எண்ணத்தையும் வடித்தெடுத்துக் காட்டும் ஏடாக விளங்க வேண்டும். மக்களின் மன நிலையைப் படம்பிடித்துக் காட்டும் இலக்கியங்களே மக்கள் மன்றத்தில் நெடிதுநாள் இனிது வாழும். அங்ஙனம் மாந்தரின் மனநிலையை மாற்றுக் குறைவின்றிக் காட்டாதன, தெரிந்தும் திரையிட்டு மறைப்பன, உண்மையை உரைக்க மறுப்பன ஆகியவை நாடுதேடும் ஏடாக விளங்காமல், வந்தவழியைப் பார்த்துத் திரும்பிப் போகும் வாழாவெட்டிகளாய் விடுகின்றன. மக்களுக்குத் தக்க இலக்கியங்கள் தோன்ற வேண்டுமேயொழிய இலக்கியத்திற்குத் தக்கபடி மக்கள் தோன்ற மாட்டார்கள். தலைக்குத்தான் குல்லாவே தவிர குல்லாவிற்காகத் தலையன்று. அதனால்தான் புலவர்கள், அதாவது அறிவுடையவர்கள், மக்கள் மனநிலையை, உள்ளக் கிளர்ச்சியை, எண்ணக் குவியலைப் படம

* திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையத்தில் 21—6—1956-ல் பேசியது. நிலையத்தார் இசைவு பெற்று வெளியிடப்பெற்றது.

பிடித்துக் காட்டும் இலக்கியங்களைப் படைத்துவந்தனர். இந்த இலக்கிய பிரம்மாக்கள் படைத்த இலக்கிய உலகத்தில் உலா வரும் ஏடுகளைக் கொண்டு அவ்வக்கால இலக்கியச்சூழ்நிலையையும் மக்கள்தேவையினையும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

தமிழ் இலக்கியத்தில் 4 காலப் பிரிவுகள்:—

தமிழ்இலக்கியத்தை நப்பொறுத்த வரையில் அதனை நாம் நான்கு பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம். அவை சங்ககாலம், இடைக்காலம், பிற்காலம், இக்காலம். இவற்றின் இலக்கியங்களைக் கொண்டு அவ்வக் கால மக்களின் தேவையை நாம் தெரிந்து கொள்ள இயலும். முதலில் சங்க காலத்தைப் பார்ப்போம்.

சங்க காலம்

நமக்கு இப்பொழுது கிடைத்துள்ள சங்க நூல்களைக் கொண்டு, போரும் காதலுமே அக்கால மக்களின் குறிக்கோளாய் இருந்தன என்பது தெரியவரும். அகத்தில் மகிழ்ந்து புறத்தில் கொதித்து எழுந்த தமிழ்ப் பெருங்குடிமக்களின் எண்ணங்களைப்பதிவுசெய்தவை தான் பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும். 'புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப் பொன்னுர் மணியும் துகிலும் பூண்டு, கனிமொழி பேசி இல்லறம் நாடும் 'காதல் மாதர்' வாழ்ந்த காட்சியைக் காட்டிச்செல்கின்றன அகப்பொருள் நூல்கள். ஒரு மைந்தன் தான் தன் குலத்திற்கு இனி எஞ்சியுள்ளான் என்பதையும் நினையாது, வேலொழுகும் போர்க்களத்திற்குப் பாலொழுகும் பாலகனை அனுப்பிய மறக்குலப் பெண்டிர் மாட்சியுடன் காட்சி தருகின்றனர் புறப்பொருள் நூல்களில். கன்னியின் காதலிலே கட்டுண்ட காளை; என்றும் கடமை தவறாத ஏந்தல்; இவன் ஒரு புறம். இதய வீணையை மீட்டிவிட்டு இன்பபுரிக்கு அழைத்துச் செல்லும் ஏந்திழையாள்; ஆனால் நாட்டு விடுதலைப்போர் என்றால் 'கட்டிக்கரும்பே, கண்ணாளா' என்று கொஞ்சாமல் 'கொட்டு முரசு, கட்டு பாசறை' என்று முழங்கும் மோகனங்கி; இவள் ஒருபுறம். இந்தச் சூழ்நிலையில் மக்களுக்

குத் தேவைப்பட்டன காதலும், வீரமும். இவற்றை விளக்க எழுந்தன அகப்பொருள் நூல்களும் புறப்பொருள் பனுவல்களும் ஆகிய சங்கத்தொகை நூல்கள்.

இடைக் காலம்

சங்க காலத்திற்குப் பிறகு சமய நூல்கள் தலையெடுக்கத் தொடங்கின. சமய நூல்களில் சமயம், சில சமயங்களில் மட்டுமே பேசப்படுகின்றது. சங்ககாலத்தில் சமய முதன்மையில்லை. மக்கள் வாழ்வோடு பிரிக்க முடியாதபடி பிணைந்து ஒன்றிப் போகவில்லை சமயம். மரத்தில் பறவையாக இருந்ததே ஒழிய மலரில் மணமாக இருக்கவில்லை. கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவில் பக்தி மார்க்கம் தோன்றி வளரத் தொடங்கியது. இப் பக்தி மார்க்கம் சமயத்துறையில் ஏற்பட்ட புரட்சி நெறி என்று சொல்லலாம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்த ஆனந்தமூர்த்தியாய ஆண்டவனுக்குக் கோவில்கள் எழுப்பப்பட்டு ஆடல்பாடல்களுடன் இறைவழிபாடு செய்யப்பட்டது. 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற சான்றோர் வழிநின்று, மக்களிடையே யுள்ள சமுதாய உயர்வு தாழ்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல், பாடிப்பாடி நிதம் தேடினாலும் பாதங்காட்டாத பரமன்பால் வைத்த பக்தி ஒன்றிற்கே மதிப்புக் கொடுக்கப்பட்டது. ஓவியம், சிற்பம் முதலிய நுண்கலைகளையும் இலக்கியஇலக்கணங்களையும் வளர்க்கும் பொதுநிலையமாகக் கோவில்கள் பயன்பட்டன. கலைக்கழகமாகக் காட்சி அளித்தது கடவுளர் உறையுள். இங்ஙனம் ஆலயங்கள் அல்லாவுதீன் அதிசய விளக்காக விளங்கி, வேண்டுவார் வேண்டுவன ஈயும் கோட்டங்களாகக் காட்சி தந்தன. அக்காட்சி களிப்பூட்டியது. இது பக்தி நெறியில, பரமனைத் தேடும் பாதையில் ஏற்பட்ட புரட்சி. எனவே, இச் சூழ்நிலைக்கேற்ப, சைவத் திருமுறைகளும் ஆழ்வார் அருட்பாடல்களும் இடைக்காலத்தில் தோன்றலாயின. இந்த நேரத்தில நாம் நாணயத்தின் மறுபக்கத்தையும் பார்க்க வேண்டியவர்களாய் உள்ளோம். அதே காலத்தில இச்சமயப் புரட்சியால் பௌத்த சமண சமயங்கள் தாக்கப்பட்டன. சமயவாதங்கள்

ஏற்பட்டன. சமய வாதிகள் ஆங்காங்கு பட்டிமண்டபத்தப் பாங் கறிந்து ஏறி வாதிட்டனர். இந்தச் சூழ்நிலையை வெளிப்படுத்த எழுந் தனவே குண்டலகேசி என்ற பௌத்த நூலும், நீலகேசி என்ற சமண நூலும்.

பக்திநெறி, பள்ளத்தே பாயும் வெள்ளம்போல் மக்கள் உள்ளங் களைக் கொள்ளை கொண்டது. கோயில்களில் ஆடல் பாடல்கள் மிகுந் தன. திருமுறைகள் தமிழ்ப்பண்களோடு ஓதப்பட்டன. நாயன்மார்க் கும் ஆழ்வார்களுக்கும் வழிபாடுகளும் விழாக்களும் தோன்றின. சமணமும், பௌத்தமும் ஒடுக்கப்பட்டு, சைவமும் வைணவமும் மேலோங்கின. இங்ஙனம் இவை ஓங்கிய பிற்காலச் சோழர் காலத் தில் இச் சூழ்நிலைக்கேற்ற இலக்கியங்கள் தோன்றின. ஆழ்வார்கள் பாடிய அருட்பாடல்களுக்கு ஆறாயிரப்படி முதல் பல்வேறு விரி வுரை நூல்கள், வைணவ வியாக்கியானங்கள், எழுந்தன. இவ்வாறே சைவ அடியவர் வரலாறுகளை விளக்கிக் கூறும் பெரியபுராணம் என் னும் பெருங்காப்பியமும், சைவ சமய உண்மைகளை விளக்கிக் கூறும் சிவஞானபோதம் முதலிய பதினான்கு சைவசித்தாந்தசாத்திரங்களும் தோன்றின.

சோழர்கள் தென்னிந்தியா முழுவதும் வென்று அடிப்படுத்தி னர். கடல்கடந்த நாடுகளையும் கைப்பற்றினர். அச் சூழ்நிலையில் அவர்தம் வீரத்தைப் பாராட்டி எழுந்தனவே கலிங்கத்துப்பரணி, இராஜராஜ விஜயம் முதலிய நூல்கள். இவ்வாறே ஒவ்வொரு காலத்தி லும் அவ்வச் சூழ்நிலைக்கு ஏற்ப இலக்கியங்கள் தோன்றலாயின.

பிற்காலம்

சோழர் ஆட்சிக்குப் பிறகு தமிழரசர் ஆட்சி நாட்டில் தலைதூக்க வில்லை. கருநாடக அரசர்களான விஜயநகர அரசர்களின் ஆட்சியும், தெலுங்கு மன்னரான நாயக்கர் ஆட்சியும் தமிழகத்தில் ஏற்பட்டன. இச் சூழ்நிலையில் இதுகாறும் தமிழகத்தில் இருந்துவந்த தமிழிசை

மறைந்து, புதியவர் செல்வாக்கால் க நாடக இசை தமிழகத்தில் கால் கொள்ளலாயிற்று. எனவே அப் புதிய இசைபற்றிய நூல்கள் பெருகின. அதே சமயத்தில் சைவத்தைக் காக்கச் சைவ மடங்களும், வைணவத்தைக்காக்க வைணவ மடங்களும் நாடெங்கும் தோன்றின. சமயப்பற்று மிகுந்திருந்த அக்காலத்தில், சைவத்திலும், வைணவத்திலும், மக்கள் மனநிலைக்கேற்பப் பல புராணங்கள் வெளிப்பட்டன. சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பிரபந்த நூல்கள் எண்ணிறந்தன தோற்றம் உற்றன. இராமாயணம், பாரதம், திருவிளையாடற் புராணம், முதலியன நாடெங்கும் மக்களால் விரும்பிப்படிக்கப்பட்டன.

ஒருபால் முஸ்லீம்களின் ஆட்சியால் இஸ்லாம் பரவியது. உமறுப் புலவரின் சீறாப் புராணம் தன் ஒளிவீசி உலா வந்தது. சர்க்கரை, சவ்வாதுப் புலவர்களின் 'மெதினு அந்தாதியும்' 'முகையதீன் ஆண்டார் பிள்ளைத்தமிழும்' தமிழக மண்ணில் தலையெடுத்தன. மேனாட்டார் வாணிபத்தாலும் கிறித்துவப்பாதிரிமார் பிரச்சாரத்தாலும் தமிழ் நாட்டில் கிறித்துவமும் கால்கொண்டது. இணையிலா இத்தாலிய நாட்டில் தோன்றிய வீரமாமுனிவர் மாசிலா ஏசுநாதர் மேல் பாடிய தீந்தமிழ்க் காவியமாகிய தேம்பாவணி இக்காலத்தில் தன் முகம் காட்டித் தமிழக மக்களை அளவிலா மகிழ்ச்சி அடையச் செய்தது.

வெள்ளையர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் பரந்த ஆங்கில அறிவினால் சாதி வேறுபாடுகள் தவறானவை என்னும் கொள்கையும், எல்லாச் சமயங்களும் போற்றத் தக்கனவே என்னும் பரந்த நோக்கமும் நாட்டில் பரவின. இச் சூழ்நிலையில் இராமலிங்க அடிகளது அருட்பா எழுந்தது. 'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போகக்' கவிபாடி வந்தார் வடலூர் வள்ளலார். இந்துமதக் கதைகளும் விழாக்களும் பெருகி வளர்ந்த காரணத்தால், அவை பற்றிய நாடகங்கள் மக்கள் உள்ளங்களை ஈர்த்தன. அச் சூழ்நிலையில் காழி அருணாசலக்கவிராயருடைய இராம நாடகம் முதலிய கீர்த்தனை நூல்கள் தோற்றம் பெற்றன.

மேனாட்டுப் புதினங்கள் (நாவல்கள்) தமிழகத்தில் பரவி மக்கள் கருத்தைக் கொள்ளை கொண்டன. அச் சூழ்நிலையில் வேதநாயகரின் பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம், பேராசிரியர் மறைமலையடிகளாரின் கோகிலாம்பாள் கடிதங்கள் போன்ற தமிழ் நாவல்கள் தோன்றலாயின. இவ்வாறே மேனாட்டு இலக்கியத் தொடர்பினால் சிறுகதை வளர்ச்சி, உரைநடை வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, திரைப்பட வளர்ச்சி முதலியன இந்நாட்டில் ஏற்படலாயின.

இக்காலம்

இவற்றையடுத்து, உரிமைவேட்கைக்காலம் உதயவானில் தோன்றியது. இச்சூழ்நிலையில் சுதந்திர சூரியன் உதிக்கின்ற நேரம், தூங்காதே தமிழா என்று தமிழக மாந்தரைத் தட்டி எழுப்பப் பாரதியின் பாடல்கள் பவனிவந்தன. பாடியவாய் தேனூறும் பாரதிபாடல்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கவிமணி தேசிகவிநாயகம் அவர்களின் பாடல்களும், நாமக்கல் கவிஞர் இராமலிங்கனாரின் பாட்டுக்களும் எழுந்தன. வீரசுதந்திரம் வேண்டிநின்ற மக்கள் வெற்றிபெற்றனர். நாட்டு விடுதலைக்குப்பிறகு வீட்டுவிடுதலையில் கருத்தைச் செலுத்தினர் மக்கள். சமுதாய மேடு பள்ளங்களைச் சரிசெய்ய வேண்டும் வாடையில் வாடும் வாழ்விழந்தோர்க்கு நடுவே 'தென்றல் அடிக்குது, என்னை மயக்குது தேன்மொழியே, இந்த வேளையிலே' என்று தெம்மாங்கு பாடிச் சிலர் இருப்பது சமுதாய ஒன்றிய வளர்ச்சிக்கு ஊறு பயப்பது; ஆதலால் உடனடியாக வேண்டுவது சமுதாய சீர்திருத்தம் என்று எழுந்தது வெள்ளம்போல் தமிழர்கூட்டம். அந்த வீறுகொள் கூட்டத்தின் செயல்கள் சீர்குலைந்த சமுதாயப் பாதையைச் செப்பனிட்டன. சமுதாய சீர்திருத்தம் தேவையென்று அரசியல் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும் வாய்ப்பறையாக நாக்கடிப்பாகச் சாற்றி வந்ததைப் போற்றிக் கேட்டது தமிழ்நாடு. அச் சூழ்நிலையில் எழுந்ததுவே பாமணக்கப் பாடி இந்தப் பைந்தமிழை வாழவைத்த பாரதிதாசன்பாட்டுக்கள். இப் புரட்சிக்கவிஞரின் கவிதைகள் முகிலைக் கிழித்துவரும் முழுமதி போன்று சமுதாய ஆற்றில் எதிர்நீச்சல் போட்டன. பாரதிகவிமண்டல

லத்தின் பட்டயம் பெற்ற இவ்வார்சைப் பின்பற்றி எண்ணிறந்த கவிஞர்கள் சமுதாய மறுமலர்ச்சிப் பாடல்களைப் பாடி வருகின்றனர்.

காலத்தையும் இடத்தையும் சுருக்கி வருகிறது காற்றினுங் கடிய விஞ்ஞானம். விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு, டெலிவிஷன், ராக்கட், பொறி இயல், வலவன் ஏவா வானவூர்தி முதலியன உலகவீதியில் உலா வருகின்றன. இச் சூழ்நிலைக்கேற்ப விஞ்ஞான நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

புதைபொருள் ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி முதலிய பலதுறைகளும் உலக நாடுகளில் முன்னேறி வருகின்ற இக்காலத்தில், அச்சூழ்நிலைக்கேற்ப நம் நாட்டிலும் இவற்றைப் பற்றிய நூல்கள் வளர்பிறை போல் வளர்ந்து கொண்டே வருகின்றன.

இதுகாறும் கூறிப்போந்த செய்திகளால் அவ்வக்கால மக்களின் தேவைகளுக்கேற்ப இலக்கியங்கள் பெருகி வந்திருக்கின்றன, என்ற உண்மையை நாம் உணரலாம்.

எதிர் காலம்

வருங்கால வாழ்க்கையினருக்குத் தேவையானவை சில. மக்கள் எந்த வழியில், எந்தவடிவில் அறிவுச் செல்வத்தை அடைய விரும்புகிறார்களோ அம்முறையில் நூல்களை ஆக்கி அளிக்கவேண்டும். அவை அவர்களின் சுவைக்குத் தக்கதாகவும், அதே சமயத்தில, சுவைக்கத் தக்கதாகவும் இருக்கவேண்டும். சீர்திருத்தக் கருத்துக்களையும், தமிழ் வளர்ச்சியையும் ஊட்டத்தக்க நாவல்கள் இந்நாளில் வேண்டற்பாலன. இவ்வழியில் சில ஆசிரியரின் நூல்கள் ஏறுநடை போட்டு நடக்கின்றன. என்றாலும் இத்துறையில் நூல்கள் மிகுதியாக வெளிவர வேண்டும். (அரசியல் அறிவையும், உணர்ச்சியையும் ஊட்டும் நூல்கள் நாட்டில் கொஞ்சம்தான் உள்ளன). வரலாற்றை உண்மையாகக் காட்டும் நூல்களுக்கு வந்த பஞ்சம்போல், வேறு எந்த நூல்களுக்கும் பஞ்சம் ஏற்படவில்லை. மக்கள் உண்மையான பழைய வரலாறு அறியத் துடிக்கின்றனர்: ஆதலின் வரலாற்று ஆசிரியர்கள் தங்கள்விருப்பு

வெறுப்புக்களை 'சற்றே விலகியிரும் பிள்ளாய் சன்னிதானம் மறைக்குது' என்று கூறி ஒதுக்கி வைத்துவிட்டு, வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர்களாய் இருந்து, நாடு, இன, மொழி வரலாறுகளை நாட்டாருக்கு நல்கவேண்டும். இது நெடிது நிலைத்து நிற்கும் அரும்பணியாகும். நாடோடிப் பாடல்களின்மீது நாட்டுமக்கள் உள்ளமும் நாடாள வந்தார் உள்ளமும் சென்றிருக்கின்றன. இருவரும் ஒன்றுகூடிச் சந்திக்கும் இந்த அரிய பாதையை அறிஞர்கள் அகலப்படுத்த வேண்டும். நாட்டின் மரபையும் மாண்பையும் விளக்குவன ஏட்டில் எழுதா இலக்கியமாகிய நாடோடிப் பாடல்கள்தாம். அவற்றை உரிய முறையில் தொகுத்து வெளியிட வேண்டும்.

பழங்கால இலக்கியச் செல்வங்களை, எல்லோரும் பங்குபிரித்துக் கொள்ளவேண்டும். யாவரும் படித்து எளிதில் புரிந்து கொள்வதற்கு அருமையானவை அவை. ஆதலால் அவற்றை எளியநடையில் எழுதி மக்கட்கு அறிமுகம் செய்யவேண்டும். இது இன்றையநிலையில் இன்றியமையாது தேவைப்படும் ஒன்று. அறிவுப் பசியால் அலையும் மக்களுக்கு இத்தகைய இலக்கிய அறிமுகங்கள் அமுதசுரபியாய்ப் பயன்படுவது உறுதி. பிறநாடு செல்லும் வாய்ப்பில்லாதார்க்குப் பிரயாண நூல்கள், உற்றுழி உதவும் நண்பர்கள் ஆகும். அவை உலகநிலையை நம் வீட்டுப் பலகணியின் வழியாகப் பார்க்க ஓரளவு உதவி புரியும். ஆதலால் பிரயாண நூல்கள் பேரளவு பெருக வேண்டும். பேர் அளவுக்கு இல்லாமல் பெரிய அளவில் வெளிவர வேண்டும்.

வீட்டை ஆளும் மொழிதான் நாட்டையும் ஆளவேண்டும் என்ற கருத்து நாட்டில் ஒலியும் எதிரொலியுமாக உள்ளது. நாட்டுமொழி வளமாவதற்கு வல்ல நல்ல கலைச்சொற்களை வடித்தெடுக்க வேண்டும். இது இப்பொழுது அறிஞர்முன் நிற்கும் பெரும்பணி. இன்றையச் சூழ்நிலையில் மக்களுக்கு மிகமிகத் தேவையானது இது. எதிர்கால இளஞ் சிற்பிகளாகிய குழந்தைகளை—தோட்டத்தின் நறுமலர்களை—நல்ல முறையில் உருவாக்கி நன்மணம் கமழச் செய்வது நம் கடமை,

அதற்குக் குழந்தை இலக்கியங்கள் பிறக்க வேண்டும். பெற்றெடுத்துத் தாருங்கள் பெரும்புலமைத் தாய்மார்களே என்று வேண்டி நிற்கிறது மக்கள் மன்றம். எங்கோ ஒலிக்கும் ஏழையின் குரலை இங்கேயும் கேட்கச் செய்து, அக்குரல், அவல ஒலியை ஒலிக்காமல் ஆனந்த ஒலியை மிழற்றச் செய்யும் ஏணி இலக்கியங்கள்- அதாவது சமுதாய முன்னேற்ற இலக்கியங்கள்-இன்று முதற்கண் தேவைப்படுகின்றன. இதுவே, மண்குடிசையினையும் மாடிவீட்டையும் ஒன்றுபடுத்தி உறவாடும் உள்ளங்களாக்கி, சமுதாயத்தில் ஒற்றுமை நிலவச் செய்யும். நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலத்திற்கு நம்மை அழைத்துச் சென்று அங்கு அகநகர், புறநகர், அழகுக் காட்சிகளைக் காட்டி மீட்டும் அழைத்து வரும் தோணி இலக்கியமாகிய இலக்கிய வரலாறுகள் வான்முறைப்படி செம்மையான முறையில் வரையப்பட வேண்டும். இவ் விலக்கியத் தோணிகள் காலத்தின் இருகரைகளையும் காட்டவல்லன. இறுதியாக, பூத்து வரும் புத்துணர்ச்சிப் பூம்பொழிலின் நறுமணத்தை வெளிக்காட்டும் மறுமலர்ச்சி இலக்கியங்களை மக்கள் மன்றம் நாடி நிற்கின்றது. வீரத்தின் விளைநிலமாய், காதலின் பிறப்பிடமாய்க் கன்னித்தமிழ்நாடு காட்சி அளிக்கவேண்டும்; இனத்தாலும் மொழியாலும் இங்குள்ள மக்கள் தமிழர்; ஆதலால் மொழிமீது விழிவைத்து முடிமன்னராண்ட இந் நாட்டிடை முத்தமிழ் முழக்கம் கேட்கவேண்டும் என்பது மக்கள் குறிக்கோள். இந்த இலக்கியச் சூழ்நிலையில் மக்களுக்குத் தேவையானது உரிமையும், கடமையும் உணர்த்தும் இலக்கிய ஏடுகள். அவற்றை அறிஞர் அளிப்பாராக. இங்கு நாம் கவனிக்கவேண்டியது ஒன்று உண்டு. இத்தகைய இலக்கியச் சூழ்நிலையை உணர்ந்துகொள்வதற்கும் மக்கள் தேவைப்படுகிறார்கள். ஆதலால் தேவையான மக்களையும், அவர்களுக்குத் தேவையான இலக்கியங்களையும் எதிர்காலத் தமிழ்நாடே! நீ ஈந்து நின் இருகைகளும் சிவப்பதாக!

ஒரு சிறு குறிப்பு: 'திரிந்ததன் திரிபு'

திரு, பண்டித. சித. நாராயணசாமியார், அறுபத்துமூவர்மடம், திருவையாறு.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு உரை கண்ட நச்சினார்க்கினியர், 'எழுத்தெனப்படுப' என்னும் நூற்பாவிலுரைத் தொடக்கத்தில் "இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின்; எழுத்திலக்கணம் உணர்த்தினமை காரணத்தா னெழுத்ததிகார மென்னும் பெயர்த்து. எழுத்தையுணர்த்திய அதிகாரமென விரிக்க. அதிகாரம் முறைமை. எழுத்துணர்த்துமிடத்து எனைத்துவகையானுணர்த்தினரோவெனின் எட்டு வகையானும் எட்டிறந்த பலவகையானு முணர்த்தினரென்க". என எழுதி, எட்டு வகையாவன இவையென நன்கு விளக்கிப் பின் எட்டிறந்த பலவகையாவன இவையெனஎழுதி, அவற்றைத் தனித்தனி உதாரண முகத்தான் விளங்க எழுதுமிடத்து, "திரிந்ததன் றிரிபு அதுவென்றல்" என்பதை விளக்குவராய்த் திரிந்ததின் திரிபு அது என்றல், 'தகரம் வருவழி' (தொல். எழு. 369) என்பதனாலும் பிறாண்டும் பெற்றும்" எனக் குறிப்பிடுகின்றனர்.

ஈண்டுத் "திரிந்ததன்றிரிபு அது" என்பதன் பொருளென்னை? அது, "தகரம் வருவழி" என்னும் நூற்பாவை நோக்கினாற் புலப்படுமா? என்றெண்ணிநிற்கும் பொழுது, புதிய குறிப்புரைகாரரெழுதிய குறிப்பினை நோக்கல் வேண்டியதாயிற்று.

அதனை நோக்குமிடத்து அது, "திரிந்ததன்றிரிபு அது என்றல்—லகரம் றகரமாகுமென முதலிற் கூறிப் பின்பு அல் லகரமே ஆய்தமுமாகுமென்றாற்போல ஓரெழுத்தை மற்றோரெழுத்தாகுமெனக்கூறிப்பின்பு அதே மற்றுமோரெழுத்தாகுமெனக் கூறல்" எனக் காணப்படுகிறது.

இக்குறிப்புரையாசிரியர், "தகரம் வருவழி யாய்த நிலையலும், புகரின் றென்மனார் புலமையோரே" என்னும் நூற்பாவிற்கு, நச்சினார்க்கினியர், "தகர முதல்மொழி வந்தால் லகரம் றகரமாகத் திரிதலே யன்றி

ஆய்தமாகத் திரிந்து நிற்றலுங் குற்றமின் றென்று சொல்லுவர் புலவர்" என எழுதிய வுரையை அப்படியே யெழுதினாரே யொழிய வேறில்லை யென்பது புலப்படுகின்றது.

லகரம் நகரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமகாவும் திரியும் என்பதையே ஈண்டுணருமாறு அத்தொடர் நிலவுகின்றதென்பது குறிப்புரை யாசிரியர் கருத்தாகின்றது.

அங்ஙனமாயின் அத்தொடரிலுள்ள 'அது' என்பது ஈண்டு எதனைக் குறிக்கு மென்னும் கேள்வி யெழும். அக் கேள்விக்குப் பதிலாக 'அது' என்பது ஈண்டு லகரத்தைக் குறிக்குமெனின், 'திரிந்ததன்' என்பது ஈண்டெதனைக் குறிக்கு மென்னுங் கேள்வி யெழும். அதற்குப் பதிலாக அஃது மீண்டும் லகரத்தையே குறிக்குமெனில் 'திரிந்ததன் திரிபு அது' என்னுமத் தொடர் நகரமாகத் திரிந்த லகரத் திரிபாகிய லகரம் எனப் பொருள் கொள்ளப்பட்டு மருள்கொண்டார் வழக்காய் முடியுமென்க.

அங்ஙனமன்று; ஈண்டு 'அது' என்பது ஆய்தத்தை உணர நிற்கின்றதெனின், குறிப்புரை யாசிரியர் அது, ஆய்தத்தைக் குறிப்பதாகுமெனக் குறித்தனரில்லை யென்பது அவருரையாற் புலப்படுகின்றது அவ்வாறது ஆய்தத்தைக் குறிக்குமெனக் கொள்ளின், "திரிந்ததன் திரிபு பிறிது" என்னு முறைமைக் கொள்ளுமிடத்து "மகரவிறுதி" (தொல் எழு. 310) என்னு நூற்பாவில் "பிறிது" என்பது எதனைக் குறிப்பதாகும்? ஆண்டு அகரத்தைக் குறிக்கு மெனில், அந் நூற்பா அகரத்தைப் பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லையே! மகரவீறு கெடவரும் வல்லெழுத்து மிகும், வேற்றுமை வழியாயின; என்பதைத் தானுணர்த்துகின்றது. ஆதலின், அகரத்தை யெவ்வாறு குறிக்கவற்றாகும்? ஏதோ ஒருவகையான் அகரத்தைக் குறிக்குமெனில் ஆண்டு, திரிந்ததன் என்பது எதனை யுணர்த்துகின்றது? அது மகரத்தை யுணர்த்துகின்றதென்னில் "திரிபு" என்பது ஆண்டு எதனைக் குறிக்கும்? என்னுங் கேள்வி யெழும்.

அதுவேயன்றி "திரிந்ததன் திரிபு அதுவும் பிறிதும் என்றல்" என்னு முறையை, "ஆறனுருபி னகரக் கிளவி, யீறு ககரமுனைக் கெடுதல் வேண்டும்" என்னு நூற்பாக் கொண்டுள்ளதாக நச்சினார்க்கினியர் குறித்தனர். இந் நூற்பா, "ஆறனுருபினு நான்க னுருபினும்" (தொல். எழு, 16,) என்னு நூற்பாவினால் ஆறும் வேற்றுமை யுருபும் நான்காம் வேற்றுமை யுருபும் நோக்கிய நெடுமுதல் குறுகும் பெயரீற்றின்கண்ணுள்ள மெய்கள் ஓர் அகர வுயிரோடு கூடி நிற்கு மென விதிக்கப்பட்ட அகரத்தின் முன்னர் ஆறும் வேற்றுமை உருபின் அகரம் கெடுமென்பதை யுணர்த்துகின்றது. அங்குத் திரிந்த தன்றிரிபு அதுவும் பிறிதும் என்ற முறையைத் தழுவிய தென்றால், திரிந்தது எது? திரிபு என்பது எதனைக் குறிக்கும்? 'அது' என்பது எதனைக் குறிக்கும்? பிறிது என்பது எதனைக் குறிக்கும்? என்னுங் கேள்விகளு மெழும். இவைகளுக்கெல்லாந் தக்கவிடை யிறுப்பதற் கேற்பதாக அக் குறிப்புரை காணல் சாலும்.

"திரிந்ததன்றிரிபு அதுவென்றல்"

திரிந்ததன்—விகாரப்பட்டதின், திரிபு—விகாரத்தை, அது என்றல்—விகாரமாய மூலவெழுத்தாகக் கொள்ளுதல், (விகாரமாயதின் விகாரத்தை வேறாகக் கொள்ளாது முன்னியல்பாகவுள்ள அவ்வெழுத் தாகவே கொள்ளுதலாம்.)

அஃதாவது, 'கஃறீது' என்புழி லகரம் தகரம்வர, ஆய்தமாகத் திரிந்தது. இங்கு, திரிந்ததாகிய லகரத்தின் திரிபை (ஆய்தத்தை) வருந் தகரம் லகரமாகவே கொள்ளுதலாமென்க. கஃறீது என்புழித் தகரம் வருமிடத்து 'கல்' என்பதன் ஈற்றினுள்ள லகரம் ஆய்தமாகத் திரிந்தது. லகரம் ஆய்தமாகத் திரியினும் மயக்கவிதி யுண்மையான் பஃது என்பது போலக் 'கஃதீது' என நிற்பினு மமையும். லகரந் திரிந்த ஆய்தம், இயல்பான ஆய்தமன்மையால் வந்த 'தீது' என்பதன் கண்ணுள்ள 'தகரம்' திரிந்த ஆய்தத்தை ஆய்தமாகக்கொள்ளாது,

லகரமாக (திரிபையேற்ற லகரமாகக் கொண்டமையால் நகரமாகத் திரியக் கஃறீது என முடிந்ததென்க. அது, "லளவென வரூஉம் புள்ளி முன்னர்த் தநவென வரிற் றனவாகும்மே" என்பதனாற் பெற்றாமென்க. 'திரிந்ததன் றிரிபு' என்பது "வகுத்தான் வகுத்தவகை" என்பதுபோல நின்றது. இம்முறையினை வடநூலார் "ஸ்தானிவத் பாவம்" என்பர். இம்முறையினைக்கொள்ளாத இடத்து "பிறிது" என்னு முறையினைக் கொள்வர். அதுவும் பிறிதுமெனக்கொள்ளு முறையு மங்குண்டு.

"திரிந்ததன் றிரிபு அது என்றல்" என்னு முறையை விளக்கவும் அதனை விளக்குமுகத்தான் 'திரிந்தத்ன் றிரிபு பிறிது என்றல்" என்பதை விளக்கவுமாகப் பாவேந்தராகிய சிவப்பிரகாச சுவாமிகள், நந்தியம்பெருமான் அடியவர்க் கருள்புரிய மண்ணுலகின்கண் உருமாறி வசவண்ணராக வந்தனர்; அவ்வாறு வந்தாலும், அடியவர்கள் அவரை நந்தியம்பெருமானெனவே கொண்டு உள்ளத்தில் மகிழ்ச்சியெய்தினர். எதுபோல என்னின் குற்றெழுத்தின் பின்னின்ற லகரம், தகரமுதல் மொழிவர ஆய்தமாகத் திரியும்; அவ்வாறு ஆய்தமாகத் திரிந்தாலும் வந்த தகரம் அதை ஆய்தமாகக் கொள்ளாது லகரமாகவே கொண்டு மயக்க விதியின்மையால் றகரமாகத் திரியும்: அது திரிவது போல எனக் கூறியுள்ளார்கள். அதை,

குறில்வழி லகரந் தனிநிலை யாயுங்
கூடிய தகரமுன் னெழுத்தென்
றறிகுறி வடிவந் திரிதல்போ னந்தி
யடல்விடை மெய்திரிந் தறினும்
நறுமலர் விழியிற் கண்டவ ரெல்லா
நந்தியே யென்றுள மகிழ்ந்தார்
பெறுதவ முயன்ற வண்ணையும் பிதாவும்
பெறுமுவ கையினையா ருரைப்பார்

என வரும் பிரபுலிங்கலீலைப் பாவாலறியலாமென்க.

"திரிந்ததன் றிரிபு பிறிதென்றல்"

திரிந்ததன்—விகாரமாயதனுடைய, திரிபு—விகாரத்தை, பிறிது என்றல்— (விகாரமாய மூலவெழுத்தாகக் கொள்ளாது) வேறாக (வேறெழுத்தாக)க் கொள்ளுதல்.

(விகாரமாயதனுடைய விகாரத்தை முன்னிருந்த எழுத்தாகக் கொள்ளாது வேறெழுத்தாகவே கொள்ளுதலென்க.) இந்தமுறைக்கு "மகரவிறுதி" என்னு நூற்பாவை உதாரணமாகக் காட்டியுள்ளனர் நச்சினார்க்கினியர்.

*'மகர விறுதி' என்னு நூற்பாவின்கண், மகரவீற்றுச் சொன் முன்னர் வல்லெழுத்து முதன்மொழி வேற்றுமை வழியில் வர, அதனை மகர வீறெனக் கொள்ளாது, அகர வீறாகிய வேறு ஈறெனக் கொள்ளுதலும் அங்ஙனங் கொள்ளுதலால் அவ் வல்லெழுத்து மிகுதலும் பெறப்படுதலால், அந்தத் "திரிந்ததன் றிரிபு பிறிது" என்னு முறை கொள்ளப்பட்டதென்பது புலனாதல் காண்க.

"திரிந்ததன்றிரிபு அதுவும் பிறிதுமென்றல்"

திரிந்ததன்—விகாரமாயதனுடைய, திரிபு—விகாரத்தை; அதுவும்—விகாரத்திற்கு மேலான எழுத்தென்றும், பிறிதும்—விகாரப் பட்டது விகாரத்திற்குமேலான எழுத்தாகாது அது வேறென்றும்; என்றல்—என்று இருவகையாகக் கொள்ளுதல்.

நெடுமுதல் குறுகி ஒற்றீறாக நிற்கும் தம், நம் முதலிய மொழிகளின் முன்னர் நான்காம் வேற்றுமை யுருபும் ஆறாம் வேற்றுமை யுருபும் வரும்பொழுது அவ்வொற்றீற்று மொழிகளி னீற்றிலே அகர வுயிர் வந்தடுக்கும். அதனை ஆறாம்வேற்றுமை 'அது' என்னும் ஒருமை யுருபு, ஒற்றீறெனக் கொள்ளாது தோன்றல்விகாரம் பெற்ற அகர வீறென (வேறீறென)க் கொள்ளுதலால் துகரம் நிற்க அகரங்

* "மகர விறுதி வேற்றுமையாயின், துவரக்கெட்டு வல்லெழுத்து மிகுமே"

கெடுதலும், பன்மை யுருபாகிய அகர வுருபு அவ்வகரத்தோடு கூடிய நெடுமுதல் குறுகிய ஒற்றீற்றினை அகர வீறாகக் கொள்ளாது ஒற்றீறாகவே (பழைய ஈறாகவே) கொள்ளுதலின் தான் கெடாது நிற்றலுங் காண்க.

'தனது' 'தமது' 'நினது' 'எனது' — இவை முதலியன ஆறும் வேற்றுமை ஒருமை யுருபின் அகரம் கெட்டதற்கு உதாரணமாகும். நினவ, எனவ'–இவை முதலியன ஆறும்வேற்றுமைப் பன்மையுருபு கெடாது நிற்பதற் குதாரணமாகும். இவ்வாறு வருதலை 'ஆறனுருபி னும்' 'ஆறனுருபின்' என்ற நூற்பாக்களையும் அவ்வுரைகளையும் நோக்கித் தெளிக.

இங்கு 'அதுவும் பிறிதும்' என்பன உருபுகளின் ஒருமை பன்மை நோக்கி முன் பின்னாக நிற்க விளக்கப்பட்டன. ஆறும் வேற்றுமை உருபுகள் ஒரே திரிபை அது எனவும் பிறிது எனவும் கொண்டனவாம்.

இனி 'திரிந்ததன் றிரிபு அது என்றல்' 'திரிந்ததன் றிரிபு பிறிது என்றல்' 'திரிந்ததன் றிரிபு அதுவும் பிறிதும் என்றல்' என்னு முறைகள், மேலே காட்டப்பட்ட நூற்பாக்களின் மட்டுமன்றி இன்னும் பல நூற்பாக்களிலும் வருதலை நோக்கி யுணர்க.

பொய்யடிமை இல்லாத புலவரும் சேக்கிழார் பெருமானார் கருத்தும்

வித்துவான், பாலூர் கண்ணப்பமுதலியார், தமிழ்த்துறைத் தலைவர்
புதுக் கல்லூரி, சென்னை.

பொய்யடிமை இல்லாத புலவர் என்னும் இவ்வரும் பெருந்தொடர் ஆளுடைய நம்பிகளின் திருவாயினின்று வெளிவந்த அருந்தொடர் என்பதை எவரும் அறிவர். இச் சிறியதொடரில் செப்பப்பட்டவர் யார் என்பதுபற்றிய கருத்து வேற்றுமைகள் காசினியில் நிலவியுள்ளன. அக் கருத்து வேற்றுமைகள் நம்பியாண்டார் நம்பிகளின் திருவாக்கை நோக்கும்போதும், சேக்கிழார் பெருமானார் செம்மொழிகளை நோக்கும்போதும் உண்டாவனவாகும்.

தரணியில் பொய்ம்மை இலாத் தமிழ்ச்சங்கம் அதில்கபிலர்
பரணர் நக்கீரர் முதல்நாற்பத் தொன்பது புலவரேனர்
அருணமக் கீயும் திருவால வாய்அரன் சேவடிக்கே
பொருள்அமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே

என்பது நம்பியாண்டார் நம்பிகள் வாக்கு. இக் கருத்துக்குச் சேக்கிழார் இணங்கிற்றிலர் என்பது அவர் பொய்யடிமை இல்லாத புலவர் புராணத்தைப் பாடி அமைத்திருப்பதினின்றும் அறிந்துகொள்ளலாம். இனி, பொய்யடிமை இல்லாத புலவர் என்பார் சங்கப் புலவர் அல்லர் என்பதைச் சேக்கிழார் எப்படி விளக்கி யுள்ளார் என்பதை முதலில் நிலைநாட்டிப் பின் அவ்வரலாற்றில் குறிப்பிடப் பட்டவர் யார் என்பதை அவர் வாக்கைக் கொண்டே நிறுவுவோமாக.

சேக்கிழார் பெருமானார் நாயன்மார்களின் வரலாற்றைப் பாடும் முறையே ஒரு தனிப்போக்கு. ஒவ்வொரு நாயன்மார் வரலாறுகளைக் குறிப்பிட்டுப் பாடி முடிந்தபின்பு, தாம்கொண்டுள்ள அடியார் பற்றை

வெளிப்படுத்த "இதுவரை இந்த அடியார் வரலாற்றைக் குறிப்பிட்டேன்; இனி அன்னார் திருவடிகளை வணங்கிக்கொண்டு அடுத்த அடியாரைப் பற்றிக் கூறத் தொடங்குகின்றேன்" என்று கூறிச் செல்வர். அந்த மரபுப்படி கூற்றுவனாயனார் புராணத்தைப் பாடி முடித்தார். அடுத்ததாகக் கூறப்போவது பொய்யடிமை இல்லாத புலவர் புராணமாகும். அந்தச் சமயத்தில் தம் வழக்கப்படி,

காதல் பெருமைத் தொண்டினிலைக் கடல்சூழ் வையம் காத்தளிக்கும்
கோதங் ககல முயல்வளர்வைதக் கூற்ற னார்தம் கழல்வணங்கி
நாத மறைதந் தளித்தாரை நடைநூல் பாவில் நவின்றேத்தும்
போத மருவில் பொய்யடிமை இல்லாப் புலவர் செயல்புகல்வாம்

என்று பாடியருளினர்.

இப்பாடலில் சங்கப்புலவர்களுள் ஒருவர் பெயரையும் குறித்திடாமல் பாடியுள்ளதையும், புலவர்கள் என்று குறிப்பிடாமல் மரியாதைப் பன்மை மரபுப்படி ஒருவர் என்ற குறிப்புத் தோன்றப் புலவர் என்றே குறிப்பிட்டிருப்பதையும், மதுரையைப் பற்றியோ, மதுரைத் தமிழ்ச்சங்கத்தைப் பற்றியோ யாதொருகுறிப்பும் தோன்றப்பெறாமல் செய்யுளினைப்பாடி அமைத்திருக்கும் முறைமையினையும் நாம் சிந்திக்கவேண்டாவா? பொய்யடிமை இல்லாத புலவர் சங்கச் சான்றோராயின் குன்றையாளியார் தமிழ்வளர்ந்த திருப்பதியாகிய மதுரையைப்பற்றி ஒரு மொழியேனும் கூறவேண்டாவோ ? மூர்த்திநாயனார் புராணத்தைப் பாடும்போதே பாண்டியநாட்டைப்பற்றியும், மதுரைமாநகரைப் பற்றியும், தமிழ்ச்சங்கத்தைப்பற்றியும்,

சீர்மன்னு செல்வக் குடிமல்கு சிறப்பின்ஓங்கும்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாடவைப்பு
நார்மன்னு சிந்தைப் பலநல்துறை மாந்தர்போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டிநாடு

மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேயம்மூதூர்
மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்குவாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்திரு ஆலவாயில்
எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்கம் இருந்ததென்றால்

என்று பெருங்களிப்புடன் பாடி மகிழ்பவர் ஏன் ஈண்டு மதுரையைப் பற்றிய குறிப்பு ஒன்றும் பேசிற்றிலர்? வேண்டுமென்றே

பேசிற்றிலர் என்க. ஒருவேளை, "காதல் பெருமை" என்று தொடங்கப்பெறும் கவி பொய்யடிமை இல்லாப் புலவர்களைப்பற்றித் தோற்றுவாய் உணர்த்தும் செய்யுளாகலின் அதில் மதுரையைப்பற்றிக் குறிப்பிட வாய்ப்பில்லை. அவரைப் பற்றிப் பாடப்போகும் புராணத்தில் அத்தகைய குறிப்புக் காணக்கூடும், என்று கருத்துக் கொள்ளலாம், பொய்யடிமை இல்லாத புலவர்களைப் பற்றிய புராணத்தில் சேக்கிழார் பெருமானால் பாடப்பட்ட கவிகள் மூன்று. அவற்றுள் இரண்டு அன்னார் இயல்புகளை அறிவிக்கும் செய்யுட்கள். மூன்றும் பாடல், தம் மரபுப்படி அதுவரை பேசிய அடியார் திருவடி போற்றி அடுத்துக் கூறப்படும் நாயனார் வரலாற்றுப்பகுதியைப் பற்றிய தோற்றுவாய் கூறும் பாடல். அம் மூன்று செய்யுட்கள்:—

செய்யுள்நிகழ் சொல்தெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே எனத்துணிந்து விளங்கிஒளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை இல்லாத புலவரெனப் புகழ்மிக்கார்

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமைஅல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்அடிமை உடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்

ஆங்கவர்தம் அடியிணைகள் தலைமேல்கொண்டு அவனியெலாம்
தாங்கியவெண் குடைவளவர் குலம்செய்த தவமனையார்
ஓங்கிவளர் திருத்தொண்டின் உண்மைஉணர் செயல்புரிந்த
பூங்கழலார் புகழ்ச்சோழர் திருத்தொண்டு புகல்கின்றாம்

என்பன. இம்மூன்று செய்யுட்களில் யாண்டேனும் மதுரையைப் பற்றிய குறிப்போ, அன்றித் தமிழ்ச் சங்கத்தை ஒட்டிய குறிப்போ உண்டோ? இல்லை அல்லவா?

சங்கப் புலவர்கள் "மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்" என்று அறுதியிட்டு உறுதியாகவும்கூற இயலாது. எற்றுக்கோவெனில் சங்க மருவிய சான்றோருள் சிவநெறியினர் மட்டும் அன்றிப் பௌத்த வைணவ நெறியினர்களும் இணைந்து நின்றனர். அவ்வாறிருக்க அவர்கள் யாவரையும் ஒருசேரச் சிவநெறியினர் எனக்கருதிச் சுந்தரர் சங்கச் சான்றோருக்குத் தாம் அடியேன் என்று கூறுவரோ?

கூறுர் அல்லரோ? சேவையர் காவலர் "மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்" என்று குறிப்பிட்டுக் கூறுவது மணிமொழியாரையே என்னலாம் அன்றோ? மணிமொழியாரும், தாம் கற்ற கல்வி இனிச் சாலும்; கற்றதன் பயன் கண்ணுதல் பரமன் கழலடி கருதி உய்தலே யாகும், என்பதைத் தம் திருவாசகத்தில்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரை ழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

என்று பாடியுள்ள பாடலின் பொருள் பொலிவினை உணர்ந்தே சேக்கிழார் பெருமானார்,

செய்யுள்நிகழ் சொல்தெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே எனத்துணிந்து விளங்கிஒளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்

என்று உளங்குளிர ஓதுவாரானார்.

மணிமொழியாரும் மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார், என்ற குறிப்புக்கு ஆதாரமாக அவரது திருவாசகத்தில்எடுத்த திருப்பாட்டின் தொடக்கத்திலேயே திருவடிமாண்பே சிறப்புறப் பாடப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டலாம். இதனை,

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே அடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

என்ற சிவபுராணப் பாடலில் தெளிவுறக் காண்க. திருவாதவூரர் மறந்தும் புறந்தொழா மரபினர் என்பது திருவாசகத்தில் ஐயந்திரிபறக் காணப்படுகின்றது.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலேஇருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல் லாதெங்கள் உத்தமனே

என்ற பாடலும்,

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வம் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே

என்ற பாடலும் மணிமொழியார் சிவனிடத்தில் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினை வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனைச் சேக்கிழார் பெருமானர் திருவாசகத்தில நன்கு கண்டமையினுல்தான் பொய்யடிமை இல்லாத புலவர் புராணத்தில் அவரைப் பற்றிய குறிப்புக் கூறும்போது, இரண்டாம் செய்யுளில்,

பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமைஅல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினின் மெய்யடிமை உடையாராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள

என்று உளமாரப் போற்றிப் புகழ்கின்றுர். இங்ஙனமிருக்கத் திருமாலையும், அவரைப்போன்ற பிறதெய்வங்களையும் வணங்கி வழிபடுவோர் நிறைந்த சங்கப் புலவர்களைப் "புரிசடையார் தமை அல்லால் சொற்பதங்கள் வாய்திறவா மெய்யடிமை யுடையாராம்" என்று எப்படிக் கூற இயலும்? இன்னோரன்ன காரணங்களால் பொய்யடிமை இல்லாத புலவர் என்பார் திருவாசகமாம் பெருநூலைத் திருவாய் மலர்ந்தருளிய திருவாதவூரர் என்பதே சேக்கிழார் கருத்தாகும் என்பது புலப்படுகிறது.

சிலப்பதிகாரம்-திருமணமும் இல்வாழ்க்கையும்

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப்பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

சோழநாடு

"சோழவளநாடு சோறுடைத்து" என்பது சான்றோர் வாக்கு. சேரநாடு மலைநாடாகவும் பாண்டிய நாடு மருதவளம் குறைந்த நாடாகவும் சோழநாடு மருதவளம் மிக்குடையதாகவும் இருந்த காரணத்தால்தான் இப் பழமொழி எழுந்தது. குடகு மலையில் தோன்றி வெள்ளப் பெருக்கெடுத்து வரும் காவிரியாறு சோழநாட்டில் (தஞ்சை திருச்சி மாவட்டங்களில்) பல கிளைகளாகப் பிரிந்து நாட்டை வளப் படுத்துகின்றது. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தில் இக் காவிரியாறு பாயப்பெற்ற சோழநாடு தமிழகத்தில் வளமுள்ள நாடாகக் கருதப்பட்டது. சோழமன்னர்கள் காவிரியாற்றின் கிளைகளைப் பெருக்கியும் புதுக்கியும் அவற்றிலிருந்து பல கால்வாய்களை வெட்டியும் சோணாடு முழுவதும் நீர்வளம் நிரம்பச் செய்தனர்.

"நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்"

என்னும் முதுமொழிப்படி சோணாடு வளநாடாயிற்று. சோழன் வளவன் எனப் பெயர்பெற்றான். குடிகளுக்கு மேலும் மேலும் வளத்தைச் செய்த காரணத்தால் கரிகால் வளவன் 'திருமாவளவன்' என்று புலவரால் ஏத்தெடுக்கப் பெற்றான்.

பூம்புகார்

'செவிலித்தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னி' என்று சிவஞான முனிவரால் பாராட்டப்பெற்ற காவிரியாறு சோணாட்டைச் சோறு உடைய நாடாக்கிக் கடலொடு கலக்கின்ற இடத்தில், பண்டைக் காலத்தில், பெருநகரம் ஒன்று அமைந்திருந்தது. ஆற்றுமுகம் என்பதற்குப் புகார் என்ற ஒரு பெயரும் உண்டு. புகாரில் அமைந்த

நகரம் 'புகார்' எனவே பெயர் பெற்றது. அஃது அழகிய புகாராதலின் 'பூம்புகார்' எனப் புலவர் போற்றுவாராயினர். "பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்" என்பது சிலப்பதிகாரம்பாடிய இளங்கோவடிகளது இனிய வாக்கு.

வணிகமன்னர்

கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் இப் பூம்புகார் காவிரிப்பூம்பட்டினம் என்ற வேறொரு பெயரையும் பெற்றிருந்தது. மேனாட்டுக் கப்பல்களும் கீழ்நாட்டுக் கப்பல்களும் அவ்வந்நாட்டுப் பண்டங்களைப் பூம்புகார்த் துறையில் இறக்குமதி செய்து, தென்னாட்டுப் பண்டங்களை ஏற்றுமதிசெய்து சென்றன. இக் கடல்வாணிபத்தின் பொருட்டுப் பலநாட்டுவணிகரும் பூம்புகார்நகரில் கடற்கரையையடுத்த தெருக்களில் வாழ்ந்து வந்தனர். சோணாட்டுப் பெருவணிகர் கடல்வாணிகத்தில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். அவர்கள் மலேயா கிழக்கு இந்தியத் தீவுகள், பர்மா முதலிய நாடுகளுக்குச் சென்று அவர்தம் மொழிகளைக் கற்று வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டினர். வேறு வணிகர் பலர் உள்நாட்டுப் பண்டங்களை வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வணிகமன்னராக வாழ்ந்தனர். அத்தகைய வணிகருள் தலைசிறந்தவன் மாநாய்கன் என்பவன்.

கடல்வாணிபத்தில் ஈடுபடாமல் வேறுபலர் உள்நாட்டு வாணிகத்தில் ஆழ்ந்திருந்தனர். அவர்கள் எருதுகள்மீது பண்டப்பொதிகளை ஏற்றி ஊர் ஊராகச் சென்று, பண்டங்களை விற்பது வழக்கம். அவர்களது எருதுப்படைக்குச் சாத்து என்பது பெயர். இச்சாத்தினை உடையவன் சாத்தன் எனப்பட்டான். இச் சாத்தருள் வாணிகத்தாலும் செல்வத்தாலும் உயர்ந்தவன் மாசாத்தன் என்றும், மாசாத்துவான் என்றும் பெயர் பெற்றான். இங்ஙனம் உள்நாட்டு வாணிகத்தாலும் வெளிநாட்டு வாணிகத்தாலும் செல்வச்சிறப்போடு வாழ்ந்த வணிகப் பெருமக்கள் நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்பட்டனர். சோழவேந்தர் இவ் விருவகை வாணிகத்தையும் உள்நாட்டுப் படையாலும் கடற்படையாலும் காத்துவந்தனர்.

மாசாத்துவான் என்ற வணிக வேந்தனது மகனே கோவலன் என்பவன். மாநாய்கன் என்பவன் பெற்ற தவமகளே கண்ணகி என்பவள். இரு வணிகமன்னரும் செல்வத்தால் சிறந்திருந்தாற்போலவே கல்விகேள்விகளிலும் ஒழுக்கத்திலும் சிறந்திருந்தனர். ஆதலின் இவர் தம் மக்களான கோவலனும் கண்ணகியும் கல்வி கேள்வி ஒழுக்கம் ஆகிய மூன்றிலும் சிறந்து விளங்கினர்; தந்தையரைப் போலவே தளராக் கொடை மக்களாகவும் விளக்கமுற்றிருந்தனர்.

காதல் மணம்

மாநாய்கனும் மாசாத்துவானும் கண்ணகி கோவலனுக்குக் கடிமணம் புரியவேண்டும் என்று இளமைதொட்டே கருதினரோ, என்னவோ தெரியவில்லை. ஆனல் கண்ணகி கோவலனை நினைந்திருந்தாள் என்பது இளங்கோவடிகள் வாக்கால் அறிகின்றோம். கண்ணகியின் தோழிமார் "இவள் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி போன்ற அழகும் செல்வமும் உடையவள்; பழுதில்லாத அருந்ததியின் கற்பை யொத்த கற்புடையாள்; பெருங்குணங்களைக் காதலிப்பவள்" என்று பாராட்டினர் என்பது இளங்கோவடிகள் வாக்கு. திருமணத்திற்குமுன் இவள் கற்புடையாள் எனக், கூறுதல் எங்ஙனம் பொருந்தும்? கணவன் என ஒருவனை உள்ளத்துட் கொண்டு அவனையே மணக்க விரும்பும் பெண் கற்புடையாள் என்றும் மணந்தபிறகு அவனிடமே தன்னை ஒப்படைப்பவள் கற்புடையாள் என்றும் கூறுவதே அறமாகும். மேலும் கோவலன் கண்ணகி வாழ்ந்த சங்க காலத்தில் களவின் வழிவந்த கற்புமணமே புலவர் பாடும் புகழுடையதாயிருந்தது. அந் நிலைக்கு மாறாக இளங்கோவடிகள் நூல் செய்தார் எனல் பொருந்தாது.

"உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும்
களவுப் புணர்ச்சியுள் காதலர்க் குரிய"

என்பது அகப்பொருள் இலக்கணம். இவ்விலக்கணப்படி கோவலனும் கண்ணகியும் "உள்ளப் புணர்ச்சி" யால் காதலராயினர் என்று கொள்ளுதலே ஏற்புடையது.

கண்ணகி கோவலனை நினைந்திருந்தாள் எனின், அவ்வாறே கோவலனும் கண்ணகியை நினைந்திருந்தானு என்பது ஆராயத் தக்கது. கோவலன் மிக்க புகழை உடையவன்; மதிமுக மடவார் தம் காதலால் 'செவ்வேள் இவனே என்று தமது ஆயத்தின்கண் பாராட்டி வத்துதற் குரியவன்' என்று இளங்கோவடிகள் குறித்துள்ளனர். இதனால் கண்ணகியின் தோழிமார் அவனது சிறப்பைப் பலபடப் பாராட்டிக் கண்ணகி முன்னிலையில் பேசுதல் வழக்கம் என்பதை அறியலாம். "காதலாற் கொண்டேத்தும் கிழமையான்" என்று இளங்கோவடிகள் கூறுதல், 'காதற் குறிப்பால் மடவார் பாராட்டுக்கு உரிமையானன்' என்பதைப் புலப்படுத்தும். நகர வாழ்க்கையில் இருவரும் தனியே சந்தித்துக் களவின்கண் காலம்போக்கல் பெரும்பாலும் இயலாது. மேலும் மணம் புரிந்துகொள்வதற்குமுன் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தலும் ஒருவர் பண்புகளை மற்றவர் அறிதலும், அறிந்தவழி விரும்புதலும் இயல்பே. அம்முறையில் திருமணத்திற்கு முன்னரே கோவலனும் கண்ணகியும் உள்ளப் புணர்ச்சியால் ஒன்றுபட்டனர் என்று கொள்ளுதல் தவறாகாது.

திருமண நிகழ்ச்சிகள்

மாசாத்துவான் மகனாகிய கோவலனுக்கும் மாநாய்கன் மகளாகிய கண்ணகிக்கும் திருமணம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இரு வீடுகளைச் சேர்ந்த பெண்மணிகள் யானைமீது அமர்ந்து தம் உற்றார்க்கும் உறவினர்க்கும் இத் திருமணச் செய்தியை அறிவித்தனர்.* மணம் குறித்த நன்னாளில் மூரசு முதலியன இயம்பின; முருடு முதலியன அதிர்ந்தன; பணிலம் முதலிய முழங்குதல் எழுந்தன; வெண்குடைகள் எழுந்தன; திருமணச் சிறப்பு ஊரெங்கும் பரந்தது.

---

* இவ்வாறு பெண்கள் யானைமீது சென்று திருமணச்செய்தி கூறுதல் தொன்றுதொட்டுவந்த வழக்கம் என்றும், தாம் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்த வாணிகர் மரபினராதலின் அவ்வழக்கம் தம்மிடையே இருந்து வந்தது என்றும் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக அவ்வழக்கம் கைவிடப்பட்டது என்றும் பூவாழூர்ச் செட்டிமார் கூறுகின்றனர் என்பது இங்கு அறியத்தகும்.

திருமணப்பந்தல் முத்துப்பந்தலாகக் காட்சியளித்தது. சந்திரன் உரோகிணியைக் கூடிய நல்லநேரத்தில் மாமுது பார்ப்பான் சடங்கு காட்டத் திருமண நிகழ்ச்சி தொடங்கியது. மணமக்கள் இருவரும் தீ வலம் செய்தனர். பெண்கள் பலவகைப் பொருள்களையும் மலர்களையும் பலவகைச் சாந்துகளையும் புகைப்பொருள்களையும் மலர்மாலைகளையும் பலவகை விளக்குகளையும் முளைப்பாலிகையையும் பிறவற்றையும் ஏந்தி நின்றனர். கொடிபோன்ற மங்கையர் "இவள் தன் காதலனைத் தன் கண்ணினும் நெஞ்சினும் பிரியாமலி நப்பாளாக; இவள் காதலனும் இவளோடு இன்புற்று வாழ்வானாக; இருவர் அன்பும் எப்பொழுதும் ஒருவான்பாகவே இருப்பதாகுக" என நினைந்து, தம் வழிபடு தெய்வத்தை மனத்தால் வணங்கி ஏத்தினர். பின்பு சில மலர்களைத் தூவி, "இமயத்து இருத்திய வேங்கைக் கொடி பொலிவு பெற்று நிற்பதாகுக; போர்மேம்பட்ட கரிகாற்சோழனது ஆட்சி சிறப்புறுக" என்று சொல்லிக் கோவலனையும் கண்ணகியையும் ஒன்றுபடுத்தினர்.

இல்வாழ்க்கை

மேனாடுகளில் பெற்றோர் தம் மகனுக்குத் திருமணம் முடித்தவுடன் மகனையும் மருமகளையும் தனி மனையில் வாழச் செய்தல் வழக்கம். இவ்வழக்கம் இன்றும் நமது நாட்டில் நகரத்தாரிடையே காணப்படுகின்றது. இவ்வாறு தனி வீடு படுத்தல் "மனையறம் படுத்தல்" எனப்படும். நாட்டுக்கோட்டைச் செட்டிமார் காவிரிப்பூம்பட்டினத்தினின்று குடியேறியவர் என்றும் கோவலன் கண்ணகி மரபினர் என்றும் அவர் தம் வரலாறு கூறுகின்றது. அவர்களிடை இம் மனையறம் படுத்தும் வழக்கம் இன்றும் இருத்தலைக் காணும்பொழுதும், திரைகடலோடித் திரவியம்தேடும் பண்பு அவர்பால் மிகுந்திருத்தலை நோக்கும் பொழுதும் அவர் கோவலன் கண்ணகி மரபினர் என்று கருத இடமுண்டாகின்றது. வணிக மன்னனான மாசாத்துவான் தன் தவ மைந்தனுக்குத் திருமணம் முடித்த பிறகு மணமக்களை இன்ப வாழ்வு வாழத் தனிவீட்டில் குடி வைத்தான்.

இன்ப வாழ்க்கை

வாழ்க்கைத் துறையில் புகுந்த மணமக்கள் தனி இல்லத்தில் பிறர் இடையீடின்றி இன்பமாக வாழ்தல் இயல்பன்றோ? அம் முறைப் படியே பல அடுக்குகளை உடைய மாடிவீட்டில் வாழ்ந்த கோவலனும் கண்ணகியும் இன்ப வாழ்க்கையில் புகுந்தனர். நிலவு ஒளி வீசும் மேனிலமாகிய நிலாமுற்றத்தில் இருந்த மலர்ப்படுக்கையில் ஞாயிறும் திங்களும் சேர இருந்தாற்போலக் கொலுவிருந்தனர்; ஆடியும் பாடியும் இன்பமாகப் பொழுது போக்கினர். அப்பொழுது கோவலன் கண்ணகியை மலர்ந்த முகத்துடன் நோக்கி, சிவபெருமான் தன் முடிமீது சூடிய பிறைச்சந்திரன் நின் திருநுதலைப்போல இருத்தலின் அதனை அவன் உனக்கே தருதல் நலம்; மன்மதன் போர்செய்தற் கெடுத்த ஒப்பற்ற கரும்பு வில்லை உன் இருபுருவங்களாகத் திருத்தித் தருதல் நலம்; பகைவர் முனையிடத்தே தமக்கு வெற்றி தருவார்க்குப் படைக் கலம் முதலியவற்றைக் கொடுத்தல் அரசர்க்கியல்பு; ஆதலால் மன் மதன் இங்ஙனம் செய்தல்நலம். இமயவர்க்கு அழியாமையைத் தரும் அமிழ்தத்திற்கு நீ முன் பிறந்தவள் (இலக்குமி போன்றவள்); ஆத லால் இந்திரன் அசுரரை அழித்துச் சுரரைக் காப்பதற்காக எடுத்த வச்சிரப்படையை நினக்கு இடையாகத் திருத்தித் தருதல் நலம். முருகன் தன் கையில் பிடித்த சுடருடை நெடுவேல் ஒன்றை நின் கண் இரண்டாகும்படி அமைத்தனன். நன்னுதால்! மயிற் கூட்டம் நினது சாயற்குத் தோற்றுக் காட்டிடத்தில் ஒளிந்தது; நினது மெல் லிய நடையினைக்கண்டு தோற்று அன்னம் பண்ணையில் முளைத்த மலர்களிடையே புகுந்து மறைந்தது; குழல் இசையினையும் யாழ் இசையினையும் அமுதத்தினையும் கலந்து குழைத்தாற் போன்ற உனது மழலைச் சொற்களுக்குக் கிளிகள் தோற்றன; நின் மழலைச் சொற்களைக் கற்க விரும்பி நின்னைவிட்டுப் பிரியாவாய் இருக்கின்றன; இச் சிறப்பு வாய்ந்த நின்னைப் புனைந்து அழகுசெய்ய நின் பணிப்பெண் கள் விரும்புகின்றனர்; உனது இயற்கை யழகு செயற்கை யழகினும்

சிறந்தது. நின் கரிய நீண்ட கூந்தலில் சில மலர்களைப் பெய்தல் நன்று; ஆனால் நின் சேடியர் அக் கூந்தல் மீது மாலையைப் புனைய முற்படுதல் பொருத்தமில்லை. நின் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டுதல் சாலும்; அதற்குமேல் மான்மதச் சாந்தை அணிதல் தேவையில்லை. நின் மார்பின்மீது தொய்யில் எழுதுதல் முறையே; அதன்மேலும் தனி முத்துவடத்தைப் பூட்டுதல் ஏனோ? இயற்கை யழகும் சில மலர்களும் அகிற்புகையும் தொய்யிலுமே நினக்குச் சுமையாகும்; இவை போதா என்று நின் தோழியர் மாலையும் சாந்தும் முத்தும் அணிதல் அவர் தம் பேய்கொண்ட தன்மையைக் காட்டுவதாகும்.

"நீ கண்ணுக்கு இனிமை தருதலால், மாசறு ஒடிய பொன்னை ஒப்பாய்; ஊற்றின் இன்பத்தால் வலம்புரி முத்தை ஒப்பாய்; உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற வாசனைப் பொருளை ஒப்பாய்; சுவையின் இனிமையால் கரும்பை ஒப்பாய்; இனியமொழி பேசுதலால் தேனை ஒப்பாய்; பெறுதற்கரிய பாவைபோன்றவளே, என் ஆருயிர்க்கு மருந்தாய் அமைந்தவளே, பெருங்குடி வாணிகன் பெருமகளே, உன்னை மலையிற் பிறவாத மணி என்று சொல்லுவேனோ! அலையிடைப் பிறவாத அமிழ்தம் என்று சொல்லுவேனோ! யாழிற் பிறவாத இன்னிசை என்பேனோ!"

என்று பொருள் பொதிந்த சொற்களால் அவளை இன்புறுத்தினன்.

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ"

என்பது கோவலன் பாராட்டுரையாக இளங்கோவடிகள் கூறியுள்ள தொடர்களாகும். இங்ஙனம் கோவலனும் கண்ணகியும் உடலும் உயிரும் போலவும் நகமும் சதையும் போலவும் மலரும் மணமும் போலவும் இன்புற்று வாழ்வாராயினர்.

பல்யானைச் செல்கெழு குட்டுவன்

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

குடநாட்டுத் தலைநகர் மாந்தை என்பது. அது நாளடைவில் மாதை எனத் திரிந்து மறைந்து போயிற்று. அதன் அங்காடிப்பகுதி இப்போது பழையங்காடி என்ற பெயருடன் புகைவண்டி நிலையமாக வுளது. சங்க காலத்தில் மாந்தை நகர்க்கண் இருந்து இமயவரம்பன் ஆட்சிபுரிந்து வருகையில் குட்டநாட்டு வஞ்சிநகர்க்கண் பல்யானைச் செல்கெழு குட்டுவன் நாடுகாவல் புரிந்து வந்தான். இக் குட்டுவன் இமயவரம்பனுக்கு இளையனாதலின், இளமையின் வளமையால் போர்ப் புகழ் பெறுதலில் தணியா வேட்கை யுடையவனாயிருந்தான். குட்ட நாட்டுக்குக் கிழக்கில் தென்னம் பொருப்பு என நூல்கள் கூறும் தென் மலைத் தொடரின் அடிப்பகுதியிலுள்ள நாட்டுக்குப் பூழிநாடு[1] என்பது பெயர். அந்நாட்டவர் பூழியர் எனப்படுவர். பூழிநாட்டவர் தென் மலைக் காட்டில் வாழும் யானைகளைப் பிடித்துப் பயிற்றுவதில் கைதேர்ந் தவர். அவர்கள் குட்டநாட்டு வேந்தரான குட்டுவர் ஆட்சியில் அவர் கட்குப் பெரும் படைத்துணை புரிந்துவந்தனர். அதனால் நம் குட்டு வன் படையில் ஏனைப்படைவகை பலவற்றினும் யானைப்படை மிக்குச் சிறந்திருந்தது. அச் சிறப்பினால் செல்கெழு குட்டுவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்று சான்றோர் பரவும் சால்பு பெற்றான். செல்கெழு குட்டுவன், வேல்கெழு குட்டுவன் என்றெல்லாம் குட்டுவர் சிறப்பிக்கப் பெறுவது மாபு.

குட்டநாட்டின் வடபகுதிக்கு நேர்கிழக்கில் நிற்கும் வடமலைத் தொடர் வானமாமலை என்று வழங்குமாயினும், தென்பகுதி பாயல் மலையெனவும் வடபகுதி வானமலை எனவும் வழங்குவதுண்டு. பாயல் மலையின் மீமிசை நாட்டுக்குப் பாயல்நாடு என்பது அந்நாளில் நிலவிய பெயர்; இப்போது அது திரிந்து வயநாடு எனக் கூறப்படுகிறது. வய நாட்டைப்பற்றி எழுதிய அறிஞர் பலர் தமிழறிவு இல்லாமையால் தம்

[1] Malabar Manual Vol. I. p, 646.

மனம்போனவாறு பொருள் கூறியுள்ளனர்.[1] வயநாடு என்பதன் உண்மைப் பெயர் வளநாடு என்பது; அது நாளடைவில் உருத்திரிந்து வயநாடு எனவும் வைநாடு எனவும் மருவிற்று என்பர் திரு. C. கோபாலன் நாயர்; (Grigg) என்பவர், பயலு என்ற கன்னட மொழி நன்செய் நிலங்களைக் குறிப்பது; இந்த நாடு நீர்வளமுடைமை பற்றி வயனுடாயிற்று என்பர்;[2] சென்னை அரசியல் அலுவலக அறிஞர் ஒருவர் வைநாடு எனக்கொண்டு மலைமேல நாடு என்று பொருள் கூறுகின்றார்:[3] வேறொருவர் தேவதச்சனுன மயன் என்பானது நாடு வயநாடு "மயக்ஷேத்திர" மாகிய வயநாடு என்று பௌராணிக நெறி[4] காணுகின்றார். இவ்வளவிற்கும் காரணம் இது சேரர் வாழ்ந்த பழந்தமிழ் நாடு என்பதை மனத்திற் கொள்ளாத நிலைமையே. ஈர் பேனுகிப் பேன் பெருமாளாயிற்று என்னும் பழமொழிக்கேற்பப் பண்டைத் தமிழ்ப்பெயர்கள் எவ்வாறு தமிழறிவு இல்லாமையால் உண்மை நிலை மறைந்து பொய்ப்போர்வை மேற்கொண்டுள்ளன என்பதைக் காட்டுதற்கே இதனை ஈண்டுக் கூறல் வேண்டிற்று. லூயிரைஸ் (L. Rice) என்பவர் ஒருவர்தான் உண்மைகாண முயன்று வயநாடு என்பது பண்டைப் பாயல்நாடு என்பதன் மரூஉ முடிபு[5] என்பதைக் கண்டு கூறினவர்.

அப்பாயல் நாட்டின் கீழ்ப்பகுதியில் இப்போது நம்பலக்காடு என வழங்குவது முன்னளில் உம்பற்காடு என்ற பெயர்கொண்டு விளங்கிற்று. அங்கே குறுநிலத்தலைவர் சிலர் வாழ்ந்து வந்தனர். வடபால் குடநாட்டு இமயவரம்பனது புகழ்மிகுவதுகண்டு பொறாமை மிகுந்து, அவன் மேலும் செல்லாவாறு தடுத்தற்குக் கருதிக் குட்டநாட்டிற் புகுந்து குறும்பு செய்தனர். அக்காலத்தே இப்போது ஆனைமலையென வழங்கும் தென்மலைப்பகுதியில் முதியர் என்பார் வாழ்ந்து வந்தனர். உம்பற்காட்டுக் குறுநிலத்தவர் குறும்பு அவர்கட்கும் இடுக்கண் விளைவித்தது.

---

(1) C. Gopala Nayar Malabar Series, Wynad Tq, பக். 2. (2) Grigg's Manual of the Nilgris. p. 1. (3) Madras Manual of Administration. Vol, ii p, 143, (4) I bid. Vol, iii, p. 1025. (5) S. I. I. Vol, ix, Introduction p. 3.

உம்பற்காட்டின் வடபகுதியில் அகப்பா என்பது அதற்குத் தலைமையிடமாக இருந்தது. உம்பற்காட்டு வேந்தர் அகப்பாவி லிருந்துகொண்டு செல்கெழுகுட்டுவனுக்கு மாறுபட்டொழுகி வரு கையில் இமயவரம்பன் வடவாரியரோடும் கடம்பரோடும் போரிட்டு அவர்களை ஒழிக்கவேண்டியிருந்தமையால், குட்டுவனை போர்மேற் கொண்டு உம்பற்காட்டுக் குறும்பரை வலியழிக்கவேண்டியவனானன். உம்பற்காட்டு அகப்பா இப்போது மலையாள மாவட்டத்துக் குறும்பர் நாடு வட்டத்தில் பயூர்மலைநாடு என வழங்குகிறது. மீப்பாயூர்க்குக் கிழக்கில் அகப்பா என்ற பேரூர் இருந்திருக்கிறது.

மிகப் பலவாய்த் திரண்ட யானைப்படையும் பிறபடைகளும் உடன்வர உம்பற்காட்டுட்புகுந்தான் குட்டுவன். அவனது படைப் பெருமை அறியாது எதிர்த்த குறுநிலத்தவர் அவன் படைக்கு எளி தில் உடைந்து தோற்றனர். அவர்களுட் பலர் செல்கெழுகுட்டுவ னது அருள்வேண்டிப் பணிந்து திறை தந்து அவன் ஆணைவழி நிற் பாராயினர். ஆங்கு வாழ்ந்த முதியர் அவனுக்குப் பெருந்துணை புரிந்தனர். உம்பற்காட்டில் அப்போதுமுதல் சேரரது ஆட்சி நடை பெறுவதாயிற்று.

உம்பற்காட்டு வெற்றியால் ஊக்கம் மிகுந்த குட்டுவன் அதன் வடபகுதியிலுள்ள அகப்பா நோக்கிச் செல்வானாயினன். அகப்பா உயரியமதிலும் பெருங்காடும் அரணாகக்கொண்டு சிறந்து விளங்கிற்று. அகப்பாவேந்தர் குட்டுவனது பகைமை பொறாது கடும்போர் உடற்றி னர். குட்டுவன் உழிஞைசூடிச் சென்று அகப்பாவின் கடிமிளையும் காவற்கிடங்கும் நெடுமதிலும் பதணமும் சீர்குலைந்தழியக் கெடுத்துப் பகைபுரிந்த தலைவர் பலரைக்கொன்று வெற்றி மேம்பட்டான். காட் டின் பலபகுதியும் குட்டுவன் படைத்திரளால் அழிவுற்றது. ஊர்கள் தீக்கிரையாயின. அகப்பாநகரும் அழிந்தொழிந்தது. முடிவில் குட்டுவன் அப்பகுதியை முதியர் காவலில் வைத்துத் தன்கோற்கீழ் இரந்து நாடுகாவல் புரியுமாறு ஏற்பாடு செய்தான். இதனைப்பதிற் றுப்பத்து மூன்றும் பதிகம்,

"உம்பற் காட்டைத் தன்கோல் நிறீஇ
அகப்பா எறிந்து பகற்றீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்து"

என்று குறிக்கின்றது.

இவ் வண்ணம் வெற்றி சிறந்து விளங்கிய குட்டுவன், வாகை சூடிக்கொண்டு தன் நாடுதிரும்பிப் போந்து தான் பெற்ற வெற்றிக் குறியாகப் பெருஞ் சோற்றுவிழாவைச் செய்தான். அப்போது சான்றோர் பலர் அங்கே வந்தனர். குட்டுவற்கமைந்த அரசியற் சுற்றத்தாருள் நெடும்பாரதாயனார் என்ற சான்றோர் ஒருவர் இருந்து வந்தார். அவர் சிறந்த நல்லிசைப் புலமையும் உயர்ந்த கேள்விநலமுமுடையவர். அவர் தான் அவ்விழாவினை முன்னின்று நடத்தினார். அக்காலைக் கோதமனார் என்ற வேறொருசான்றோரும் குட்டுவன்பால் வந்திருந்தார்.

கோதமனார் பாலையூர் என்னும் ஊரினர். அவ்வூர் குட்டநாட்டில் இப்போதைய பொன்னானிவட்டத்தில் சாவக்காடு என்ற பகுதியில் உளது; மேலைக்கடற்கரையில் அமைந்தது. வஞ்சிநகரான கொடுங்கோளூரிலிருந்து ஒரு பெருவழி இவ்வூருக்குச் செல்லுகிறது; அதற்குப் பாலையூர்ப்பெருவழியென்பதும பெயர். இப்பாலையூரில் வாழ்ந்த பார்ப்பனர் குடியில் கோதமனார் தோன்றி நல்லிசைப்புலமை பெற்று விளங்கினார். அவருடைய புலமையும் நட்பும் குட்டுவனுக்கு மிக்க மகிழ்ச்சி தந்தன. குட்டுவன் செந்தமிழ் நலத்தில் திளைப்பது ஒருபால் இருக்க, போர்த்திறத்தில் அவன உள்ளம் வீறுமிக்கு விளங்குவது ஒருபால் அவர் புலமையுள்ளத்திற் பற்பல எண்ணங்களை எழுப்பிக்கொண்டிருந்தது. ஒருகால் அவர் குட்டுவனுடன் உரையாடியிருக்கையில், "வேந்தே, கழிசினம் கழிகாமம், கழிகண்ணோட்டம், அச்சமிகுதி, பொய்மிகுதி, அன்புமிகவுடைமை, கையிகந்த தண்டம் என்பன நல்லரசுக்கு ஆகாதவை என விலக்கப்பட்ட குற்றங்களாகும். இவற்றை முற்றவும் கடிந்து, தன்னாட்டவர் பிறரை நலிவதும் பிறரால் நலிவுறுவதுமின்றிப் பிறர்பொருளை வெஃகாமல், குற்றமில்லாத

அறிவுகொண்டு துணைவரைப் பிரியாமல் நோயும் பசியும் போக்கி இனிது வாழவும், கடலும் காலும் வேண்டும் பயன்களை உதவவும் நன்கு அரசாண்ட உரவோர் நின் முன்னோர். நீ அவர்தம் வழிவந்த செம்மல். நீ கபிறுகுறு புகவைவயை ஆனினம் மொய்க்கும் கொங்கு நாட்டை வென்றுகொண்டாய். ஐயவித்துலாமும் நெடுமதிலும் ஆழ் கிடங்கும் அரும்பதணமும் பொருந்திய அகப்பாவை உழிஞைப் போர்செய்து கைப்பற்றி நூறினாய். வருபுனலை அடைப்பவரும் நீர் விளையாடுபவரும், வில்விழாச் செய்பவருமாய் இன்புற்று வாழும் மக்கள் நிறைந்த மருதவளம் பெற்றுச் செருக்கிய பகைநாட்டவர் நீ சினந்து சீறியபடியால் வலியழிந்தொடுங்குவது ஒருதலை. அவருடைய நாடுகள் நண்பகற் போதிலே குறுநரி கூவ, கோட்டான் குழறப் பேய்மகள் ஆடும் பாழ்நிலமாவது திண்ணம்; அவை அளிய" (பதிற். 22) என்று குட்டுவனுடைய தொல்வரவும் ஆள்வினைச்சிறப்பும் போர் வென்றியும் எடுத்தோதிப் பாராட்டினர். அது கேட்டுப் பேருவகை கொண்ட சேரமான் அவரைத் தன் அரசியற் சுற்றத்தாருள் ஒருவராக்கிக் கொண்டான்.

குட்டுவனுக்கு அரசியலறிவு நல்கிய ஆசிரியரான நெடும்பாரதாயனார் முன்னின்று புரோகிதம் செய்யப் பாலைக்கோதமனார் புலமைத் துணைபுரியப் பெருஞ்சோற்று விழா இனிது நடைபெற்றது. போர்முரசு எண்திசையும் எதிரொலிக்க முழங்கிற்று. முரசுக்குக் குருதியூட்டிப் பலிதருவோன் கையில் பிண்டத்தையேந்தினான். அது கண்டு பேய்மகளிர் கைகொட்டிக் கூத்தாடினர்! குருதிகலந்த அச்சோற்றுப் பிண்டத்தை எறிந்தபோது சிற்றெறும்பும் அவற்றைமொய்த்து உண்டற்கு அஞ்சின; காக்கையும் பருந்தும் கலந்திருந்து உண்டன. பின்னாக் கொடைமுரசு முழங்கிற்று. போர் மறவரும் பரிசிலரும் முரசின் ஓசை கேட்டு உவந்து வந்து கூடினர். இயவர் இனிய இசை விருந்து நல்க மறவர்க்குப் பெருஞ்சோறு வழங்கப்பட்டது.

(தொடரும்)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஐந்திணை யைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணநூல் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்[illegible]கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவ்யாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 51 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.